# தென்றல்

பதிவு இலக்கம் : 361910

காற்று : 06 சுகந்தம் : 22 ( ஆடி - புரட்டாதி ) 2013




தவராஜா மோகனப்பிரியன்

65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

# LG Abans
## Show Room

Life's Good






LG இன்வேட்டர்
வளிச்சீராக்கி
9,000-24,000btu
**114,900** ரூபாவிலிருந்து

**வட்டியில்லா 18 மாத கொடுப்பனவு**

**குறைந்த மின்சாரத்தில் இயங்கும் வளிச்சீராக்கி மட்டக்களப்பு அபான்ஸ் காட்சியகத்தில் மட்டுமே! இச் சலுகைகள் ஏப்ரல் 30 மட்டுமே!**

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**தொடர்புகளுக்கு....**
**அபான்ஸ் காட்சியறை,**
**263, 265, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**
**தொலைபேசி இல : 065-2227895**

AD/0020

# தென்றல்
# THENDRAL



44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com



**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திரு. வீ. கே. ரவீந்திரன் (ரவிப்ரியா)
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி.டானியல்

**கணனி வடிவமைப்பு**
அ.ஜெயலக்ஸ்மி



**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)**


# மூன்றாவது கண்ணகி விழா!!!

காவிய நாயகியான கண்ணகிக்குத் **"திருமா மணி நங்கை வந்தாள்! எங்கள் தேசந் தளைத்திட வந்தாள்!! வந்தாள்!!!"** என்ற மணி மகுடத்துடன் அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் பல நூற்றுக் கணக்கான பேராளர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், பார்வை யாளர்கள் எனப் பலதரப்பட்டோர் திரண்டிருக்கக் கண்ணகி கலை இலக்கிய விழா கடந்த ஆனி 15,16 ஆகிய தினங்க ளில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழா இருதினங் களிலும் ஆய்வரங்குகள், கலை நிகழ்வுகளை உள்ளடக் கியதாக முழுநாள் நிகழ்வாக **"கண்ணகி கலை இலக்கியக் கூடல்"** ஏற்பாட்டுக் குழுவால்

ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இவற்றில் விழாக்குழுத் தலைவர் த. கோபாலகிருஷ்ணனின் தொடக்கவுரை, **“கூடல்”** (பரல்-2) —விழா மலர் வெளியீடு, கண்ணகி கலை இலக்கிய விழா-2012 விபரண ஒளிப்படக்காட்சி, கிழக்கிலங்கை சிற்றிதழ்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நூலங்காடி, கவியரங்கு, கலைநிகழ்வுகள் என்பன குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருந்தது.

இவ்வாறாக இலக்கியப் புரட்சிக்கு வித்திட்ட நிகழ்வாக தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் இனிதே நிறைவுற்றது.

இனிவரும் காலங்களிலும் இவ்விழா சிறப்புற நடைபெற வேண்டுமெனத் **“தென்றல்”** மனதார வாழ்த்துகிறது !!!

**என்றென்றும் அன்புடன்**

**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் “தென்றல்” இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

**அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.**

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

- கலாபூஷணம், ஆறுமுகம், அரசரெத்தினம் -




உலகில் இயற்கை நிகழ்வுகள் பல நிகழ்கின்றன. கவிஞர்கள் தமது குறிப்புக்களை- எண்ணங்களை இயற்கை நிகழ்வுகளின் மீது ஏற்றி வைத்துக் கூறுகின்ற அணி **"தற்குறிப்பேற்ற அணி"** என்று பெயர் பெறும். **"ஊருணி நீர் போல"** பிறருக்கு உதவி செய்து கொண்டிருந்த ஒருவர் மரணிக்க அச்செய்தி கேள்விப்படுகின்ற நேரத்தில் மழை தூறுகிறது . கவி உள்ளம் படைத்த புலவன் நல்லவரின் மறைவு கேட்டு வானவர்களும் கண்ணீர் விடுகின்றனர். அக்கண்ணீர்த் துளிகளே இம்மழைத் துளிகளென தமது குறிப்பை இயற்கை நிகழ்வில் ஏற்றி வைத்துக் கூறியுள்ளமையால் இது **"தற்குறிப்பேற்ற அணி"** ஆகிறது.

விசுவாமித்திரர், இராமன், இலட்சுமணன் ஆகிய மூவரும் மிதிலைக்குச் செல்கின்றனர். அந்த நாட்டு மன்னன் ஜனகனின் மகளாக ஜானகி பிறக்கிறாள். வில்லை வளைத்துச் சீதையை மணக்கும் வீரனை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். மிதிலைநகர் மதிற்சுவர்களில் கொடிகள் பறக்கின்றன. காற்றில் அசைந்தாடும் கொடிகள் கைகளாக மாறுகின்றன. சீதையை மணக்க இராமனை விரைந்து வருமாறு அவை அழைப்பதாகக்

கம்பன் கவி புனைகிறான். **"செழுமணிக் கொடிகள் என்றும் - கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண் ஐயனை- ஒல்லை வாவென்று அழைப்பது போன்றதம்மா"** என்று பாடினான். கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டு நளன் பிரிந்து போய் விட்டான். விடியற் பொழுதில் கண்விழித்த தமயந்தி கணவனாகிய நளனைக் காணாது திகைத்தாள்; பதைத்தாள்; துடியாய்த் துடித்தாள். நற்குணமும், நாற்படையாய்க் கொண்ட தமயந்தியின் துயரத்தைப் பார்த்து சகிக்க முடியாத சேவற் கோழிகள் தமது சிறகாகிய – தமது வயிற்றிலடித்து சூரியனை விரைந்து வரும்படி கூவி அழைப்பதாக புகழேந்திப் புலவர் பாடியுள்ளார்.

**"தையல் துயர்க்கு தரியாது தம்சிறகாம் கையால் வயிறளைத்து**
**வெய்யோனை வாவு பரித் தேரேறி வா வென்றழைப்பது**
**போல் கூவினவே கோழிக்குலம்"**

இவை **"தற்குறிப்பேற்ற அணிக்கு"** சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

**"கண்ணுக்கு மையழகு கவிதைக்குப் பொய்யழகு"** என்பதை விட **"கவிதைக்குப் புழுகு அழகு"** என்று கூறுவது பொருந்தும். உள்ளதை மிகைப்படுத்திக் கூறுவதே புழுகு. இதனை **"உயர்வு நவிற்சியணி"** என்று பெயர் சூட்டி மகிழ்ந்தவர்கள் தமிழர்கள். **"உயர்வு நவிற்சியுணி"** யை உயர்வாகப் பயன்படுத்தியதில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் உயர்ந்தே நிற்கிறான். இராமனின் மனைவி சீதையை இராவணன் சிறை வைத்தான். இராமன் குரங்குப் படையுடன் இலங்கைக்கு வந்தான். போர் தொடங்கியது. முதல்நாள் போரில் இராவணன் தோற்று வீரமும்-களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான். தனது தம்பியான கும்பகர்ணனை எழுப்பி போருக்கு அனுப்ப நினைத்தான். சேவகர் கும்பகர்ணனை எழுப்ப முயன்றனர். முடியவில்லை. இராவணனின் கட்டளைப்படி கும்பகர்ணனின் மார்பிலே ஆயிரம் குதிரைகள் வேகமாக ஓடுகின்றன.

**"கட்டுறு கவனமாவோர் ஆயிரம் கடிதின் வந்து**
**மட்டற உறங்குவான் தன் மார்பிடை மாலைமான**
**விட்டுற நடத்தி ஓட்டி விரைவுற சாரி வந்தார்**
**தட்டுறு குறங்கு போல தடந்துயில் கொள்வதானான்"**

என்பது பாடல். ( கவனம்- குதிரை, கடிதின்- விரைவில், மட்டற- அழவின்றி, மாலைமான- மாலையைப் போல, சாரி – சவாரி , தட்டுறு - தட்டுவது போல, தடந்துயில்- ஆழ்ந்த தூக்கம்)

ஆயிரம் குதிரைகள் மார்பிலே மாலைபோல் ஓடுவதாயின் அந்த மார்பு எவ்வளவு பரந்து விரிந்திருத்தல் வேண்டும். எவ்வளவு உறுதியாக இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள். குதிரைகளின் காலடியோசை சிறு குழந்தைகளைத் தொடையிலே தட்டி உறங்க வைப்பது போலாயிற்று — என்பது கம்பனின் புழுகு. கும்பகர்ணனுடைய மிகப்பெரிய உருவத்தைப் பின்வருமாறு கம்பன் கூறுகிறான்.

**"விண்ணினை இடரும் மோதி விசும்பினை நிறைக்கும் மேனி**
**கண்ணெனும் அவையிரண்டும் கடல்களில் பெரியனவாகும்"**
( விசும்பு- உலகம்)

கும்பகர்ணனுடைய சாப்பாடு பற்றிக் கம்பன் புழுகுகிறான்.

**"ஆறுநூறு சகடத்து அடிசிலும் நூறு நூறு**
**குடம்(ங்)களும் நுங்கினான்"**


என்பவை **"உயர்வு நவிர்ச்சி அணிக்கு"** சிறந்த உதாரணங்களாகும்.

சங்க இலக்கியப் பாடல்கள் அகம்- புறம் என்ற இரு பிரிவுக்குஉட்பட்டவை. தூய காதல், ஒழுக்கம் பற்றியவை அகத்திணைப் பாடல்களாகும். அப்பாடல்களுள் முதல், கரு, உரி என்பன அமைந்திருத்தல் வேண்டும் என்பது நியதி . முதல்- நிலம்(இடம்), பொழுது(காலம்) , உரி என்பது ஐவகை நிலங்களுக்குரிய ஒழுக்கமாகும். கரு என்பது அந்தந்த நிலங்களுக்குரியவை. அவை பதினாறு வகைப்படும். மக்கள், மரம், தொழில், பறவை, மிருகம், பறை, பண், மாலை, பெயர்கள் பற்றியவை கருப்பொருள்களாகும். இவற்றை **"இறைச்சிப் பொருள்"** எனவும் கூறுவர். நேரடியாக - வெளிப்படையாகக் கூற முடியாதவற்றை அல்லது கூற விரும்பாதவற்றை மறைமுகமாக கருப் பொருளில் வைத்துக் கூறுவது **"உள்ளுறை உவமை அணி"** என அழைக்கப்படும். சங்க இலக்கியப் பாடல்களிலே இவ்வணி பெரிதும் கையாளப்பட்டுள்ளது. தலைவியைப் புணர்ந்த தலைவனைப் பற்றித் தோழி குறிப்பிடும் போது — **"மலரின் மதுவுண்டு மயங்கிக் கிடந்த வண்டு பறந்துசெல்லும் ஊருக்குத் தலைவனே"** — என்று சுட்டிக் கூறுவார். இவ்வணியினை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு நாட்டுப் புறப்பாடல் ஒன்று கைகொடுக்கும். **"மாமி வளர்த்த மான் புள்ளிச் சாவல் ஒன்று தேத்தாவின் கீழே நின்று சிறகடித்துக் கூவுதுகா"** . பருவ வயதடைந்த மகளின் செயலைப் பார்த்த தாய் மகளிடம் கேட்ட கேள்விக்கு மகளின் விடை இப்பாடல்.

**(தொடரும்...)**

# தென்றலின் தேடல்

-ருபாகரன்-



## தவராஜா. மோகனப்பிரியன்

மட்டக்களப்பைச் சேர்ந்த தவராஜா – மோகனப்பிரியன் தனது உயர் கல்வியை உரிய வகையில் கற்பதற்காக கடல் கடந்து சென்று இன்று நடனத் துறையில் இமாலய சாதனை படைத்து வருகிறார். இவ்வாறான புகழ் பூத்த கலைஞரைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது .

## குடும்பப் பின்னணி

மட்டக்களப்பைச் சேர்ந்த தவராஜா என்கின்ற தொழிலதிபருக்கும் - விஜயசுந்தரி என்கின்ற இல்லத்தரசிக்கும் மூத்த மகனாக மட்டக்களப்பில் அவதரித்தார்.

## பாடசாலைக் காலம்

தனது கல்வியினை மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் கற்றதாகவும்- தனது ஈடுபாடு கூடுதலாக நடனத் துறையில் இருந்ததன் காரணமாக நடனக் கல்வியின் ஆரம்பத்தினை பரதக் கலாலயாவில் பரத சூடாமணி ஸ்ரீமதி சுபித்ரா கிருபாகரனிடம் கற்றதாகவும் அவர் **"தென்றல்"**க்கு பெரும் ஆதங்கத்தோடு தெரிவித்தார்.

## உயர் கல்வித் தகமைகள்

பரதத்தில் தனது இளநுண்கலை மற்றும் முது நுண்கலைப் பட்டப் படிப்பினை இந்தியாவில் திருச்சிப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் சுமார் 7 வருடங்கள் கற்று, முதல் தரத்துடன் தங்கப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

பரத நாட்டியம் தவிர- குச்சுப்புடிக்கான பட்டயப் படிப்பினை மறைந்த கலாபூஷணம் ஸ்ரீ கிருஷ்ணாவிடமும், மோகினி ஆட்டத்திற்கான பட்டப்படிப்பினை ஸ்ரீமதி குமாரி மேனனிடமும் கற்று அரங்கேற்றத்தையும் நிகழ்த்தியுள்ளார்.

இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.








## பெற்ற பட்டங்கள்

1. பாரதி யுவகேந்திரா அமைப்பினால் பரத நாட்டியத் துறையில் ஆற்றி வரும் சேவைக்காக வழங்கப்பட்ட சுவாமி விவேகானந்தர் விருது.
2. திருச்சி மாணவர் இயக்கம் வழங்கிய வளரும் சாதனையாளர் விருது.
3. ஜெகரட்சகன் அமைப்பு வழங்கிய நடனக் கலையரசன் விருது.
4. திருச்சி நிருத்திய சிகர நாட்யாலயா குச்சுப்புடித் திறமைக்காக வழங்கிய நாட்டியக் கலையரசன் விருது.






## அரங்கேற்றமும் - தொழிலும்

தனது நடனத் திறமையினை இலங்கை, இந்தியா, ஜேர்மனி , நோர்வே, நெதர்லாந்து, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் நிகழ்வுகளை நடாத்தியதன் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். அது மட்டுமன்றி இந்தியாவில் 50 மாணவர்களுக்கு நடனத்தைப் பயிற்றுவித்து – அரங்கேற்றத்தையும் நடாத்திய பெருமை அன்னாரையே சாரும். இவர் தற்பொழுது சிங்கப்பூர் தேசிய கலைப் பேரவையின் அனுசரணையுடன் இயங்கி வரும் அப்சராஸ் கலை நிறுவனத்தின் நடனப்பயிற்றுவிப்பாளராகவும், வடிவமைப்பாளராகவும் பணி புரிந்து கொண்டிருக்கிறார். அத்தோடு இலங்கையில் அருஸ்ரீ கலையகத்தில் நடனக் கலைஞராகவும், வடிவமைப்பாளராகவும் சீரிய சேவை புரிகிறார்.

இவற்றோடு தனது கலை ஆற்றலை நிறுத்தி விடாது - இந்தியாவில் கல்வி கற்கும் காலங்களில் பல நடனங்களையும் - ராமாயணம், நந்தனார் சரித்திரம் போன்ற நாட்டிய நாடகங்களையும் வடிவமைத்து நிகழ்ச்சியாக வழங்கி யிருக்கிறார். அத்தோடு சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட **"shakthi classical dance stars"** தொகுப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

இவ்வாறாக எமது மண்ணிலிருந்து இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று நடனத் துறையில் இமாலயச் சாதனைகள் படைத்து வரும் மோகனப் பிரியனின் சாதனைகள் இன்னும்- இன்னும் தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது .

3

# கதிர்காமம் சமாது மடப்பட்டயம்

கலாபூஷணம். க.தங்கேஸ்வரி (பி.ஏ)தொல்பொருளியல் சிறப்பு

## கதிர்காமம் சமாது மடபபட்டயம் முன்புறம்




சூரிய – சந்திரர் குறியீடுகள் நடுவில் வேல் கீறப்பட்டுள்ளது. நடுவிலே கதிர்காமம் என்பது **"கெதிரகாம"** என எழுதப்பட்டுள்ளது. இரு புறமும் காந்தருவர் இருவர் பறப்பது போலும், வலப்புறம் பிள்ளையாரும், நடுவிலே திருவாசிக்குள் முருகன்- வள்ளி- தெய்வானை அம்மன்களுடன் -மயிலுடனும் , இடப்புறம் மாணிக்க கங்கையும் வரையப்பட்டுள்ளது. மாணிக்க கங்கைக்குள்மீன்கள், வேறு ஜீவராசிகளும் காணப்படுகின்றன.

அடுத்த படியாக நவவீரர்கள் ஒன்பது பேரும் எதிர்- எதிராக ஒரு புறம் நால்வரும் மறுபுறம் ஐவருமாக வாள்களைக் கையிலேந்தி நிற்கும் ( நடப்பது போன்ற) நிலையில் வரையப்பட்டுள்ளனர். நவவீரர்களின் பெயர்கள் குற்று இடப்படாத எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. அவை வருமாறு :-

1. வினதி வீரன – வினதி வீரன்
2. வீமாாததாண்டன – வீரமாக்தாண்டன்
3. வீாகெமபிரன – வீரகெம்பீரன்
4. விாூவுனா – வீரமுஷணன்
5. வீாதுாநான – வீரதுரங்கன்
6. வீாூசஙகன –வீரபுஜங்கன்
7. வீாதுாசூான – வீரதூசூரன்
8. வீாபாகு தெவன – வீரபாகுதேவன்

9. வீாவசநன – வீரவச்சநன்

இதற்குக் கீழே 18 பட்டய வரிகள் ஒழுங்கற்ற – குற்று இடப்படாத எழுத்துக்களால் தொடர்கின்றன. பிள்ளையார் சுழியுடன் தொடர்ந்து ஆண்டு, திகதி , தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. அதன்படி பட்டயத்தில் எழுதப்பட்டுள்ள திருத்தமற்ற, குற்று இடப்படாத முறையில் எழுதப்பட்டவையும் - சரியாக வாசிக்கப்பட்டு எழுதியவையும் வருமாறு :-



1 . த எனஙயக ஆணடு விரேுத இருதி வருச மசி ததி 1000 700 301

1731 ஆம் ஆண்டு விரோத கிருதி வருசம் சித்தி ( ரை)

2. னா மாதம யடு செவாயககிழமை னன கனு

ரை மாதம் 15 செவ்வாய்க்கிழமை நாள் அனுஷ

3. வுநடதேதிர முமது திகையும கூடின புண்ணிய

நட்செத்திரமும் துதிகையும் கூடின புண்ணிய

4.தினததிலே கதிரகாம சுவாமி யா கதிாநவி அவாகள

தினத்திலே கதிர்காம சுவாமி யர் கதிர்நவி அவர்கள்

5.சனை தியில மடம பழனி அய்யான கயில முதலி

சன்னதியில் மடம் பழனி அய்யனார் கயிலை முதலி (யார்)

6. யாா நல்ல தமபி முதலியாா முனனிலயாக

யார் நல்லதம்பி முதலியார் முன்னிலையாக.

7. கொழமபுககு ஓடி வநத பண வணககாநாவோ

கொழும்புக்கு ஓடி வந்த பண வண்க்கர் நாடு வெ

8. சஙவததிர சணமுமயினச மம தியாயி சநதிரான சூ

சுங்குவத்திர சனமும் சமாதியாகி சந்திர சூரியன்

9. ளளாழா மடைருளயிசலாமான மனாாககாய ஈன

வெள்ளாச் செட்டிகள் இசுலாமான மரைக்காயர்.

10. ரி யாள உளள மடடுமே வாரத தெததம பண

( ரியான்) உள்ள மட்டும் வாரத் தெத்தம் பண்ணி குடுத்த

11. பரிசாவது கொழுமபுககு ஓடி வநத பண வணக கா

பரிசாவது கொழும்புக்கு ஓடி வந்த பண வணக்காரும்

12 . நா பபண வணககாா ஒணணுகடு காலயினாருயால விழுககாடு

நாப்பண வண்ணக்களும் ஒண்ணுக்குக் கால் இனாரு பால வழக்காடு

13. குடுப பொமாகமும குதததா மதுா ககு யா தாமமாருவ

குடுப்போமாகவும் இந்த தன்மத்திற்கு யாதாகிலுமொருவர்

14. இட கூவ பண்ணின போகள தமிழவன ஆனால கெஙகைக

இடையூறு பண்ணின் போக்கள தமிழவன் ஆனால் கெங்கைக்க

15. ரையிலே மகாபாதகஙக வள பணனி வதாழ நதிலே

( க) ரையிலே மகாபாதகங்களை பண்ணிய தாழமதிலே

16. போ வாாகள இசலாமமானவாகள ஆனால மகக நதி

போவார்கள் இசுலாம்மானவர்கள் ஆனால் மக்கநதி ( லே)

17. லே பளள யை யிடித்த தொழருதிலெ பொவாரகள இ

லே பள்ளியை யிடித்த தொழுநதியிலே போவார்கள் ( இ)

18. இப்படி சமமதிதது எழுதிக குடுதத படடையம

இப்படி சம்மதித்து எழுதிக் குடுத்த பட்டயம்

இரு பக்கங்களிலும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## வலப்பக்கம்

மதிசூதநன- காசுபதி – மகேசன

மதிசூதனன்- காசுபதி – மகேசன்

## இடப்பக்கம்

கனைளயிமுதலியார- எமன

கனகளயி முதலியார்- தன

அருளபபு முதலியார

அருளப்பு முதலியார்

## இப்பட்டய விளக்கம் ( சாசன விளக்கம்) வருமாறு :-

ஐம்பொன்னாலான இந்த சமாது ( சமாதி ) மடப் பட்டயம் என்பது சுமார் 4 கிலோ இடையுடையது. இதன் மேற்பகுதியில் தொங்க விடுவதற்கு ஏற்ற வகையில் செய்யப்பட்டுள்ளது. சுமார் 12 அடி நீளமும், 8 அடி அகலமும் உடையது. 1731 ஆம் ஆண்டிலே பொறிக்கப்பட்ட இப்பட்டயம் ( சாசனம்) மறைத்தே வைக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் கந்தசுவாமி கோவிலில் இன்று கப்புறாளை எனப்படும் சிங்களப் பூசகர்கள் பூசை செய்தாலும், இவர்களது உரிமை வம்சாவளியானது எனக் கூறப்படினும், ஆதியில் கதிர்காமத்தில் பிராமணப் பூசகர்களே பூசை செய்துள்ளனர் என்ற விடயம் இப்பட்டயத்தின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

(தொடரும்...)

**எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியலாளர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. (ஆ-ர்)**

# உறுதியுடன் உழைத்திடுவாய்!!!

-க.ரெட்ணையா - கன்னன்குடா.

சுதந்திரப் பறவை தூங்கிட முன்பு
தோழனே எழுந்து தொழில் செய்யவாடா!
இயந்திரமாய்ப் போனது எல்லாம்
இனியும் நாம் சோம்பேறியாக இருந்திடலாமா?- மது
மயக்கத்தில் நாட்களைக் கழித்திட்டால் தம்பி
மறுபடி இளமை திரும்பித்தான் வருமா?
சுதந்திரம் வேறு எங்கேயுமில்லை – நீ
செய்யும் தொழிலைத் திறம்படச் செய்தால்!!!

தொழிலாளர் ஒன்று சேர்ந்திட்டால் உலகில்
சொர்க்கம் நமது பக்கத்தில் உண்டு
பழிவாங்கும் எண்ணம் உன் மனதில் படர்ந்தால்
பகலும் உனக்கு இரவாய்த் தோன்றும்
வழியிலே உள்ள கல், முள்ளினை அகற்றி
வறியோர்க்குதவு வருங்காலமுனை வணங்கும்
மொழியினை வெவ்வேறாய் பிரித்திட்ட போதும்
மொத்தமாய் மனித குலமொன்றே!!!

உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றே
ஒரு பிடிச்சோற்றை உழைத்து நீ உண்பாய் !
தளைக்கும் வாழை இனமது போன்று
தரணியில் வாழ்வாய் நீ தலைவனாவாய் !!!
மழைக்கு அஞ்சி ஒதுங்கிடும் மந்தை போல்
மனிதா நீயும் ஒதுங்கிடா வாழ்வில்
உழைத்து தினமும் உயர்வேனென்று
உறுதியுடன் ஓயாது உழைத்திடுவாய் !!!

## -நீத்தார் நினைவு-

# தரணியெங்கும் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்தியம்பிய தனிநாயகம் அடிகளார் !!!

-பழுவூரான்-



தமிழ்த்தூது தனிநாயகம் யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பயின்று தமது புலமையின் காரணமாக மலேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர்.

அத்தோடு உலகின் நாலா பக்கமும் தமிழ்த்தூது சென்று பல்வேறு ஆய்வுகளையும் செய்தார். இவற்றோடு பல்கலைக்கழக மட்டத்தில் சொற்பொழிவுகள், மற்றும் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் தமிழ்மொழியின் சிறப்பை அறியச் செய்ததோடு- தமிழ் உலகம் மறந்து போன பழந்தமிழ் நூல்களை தமிழ் உலகுக்கு வெளிப்படுத்திய பெருமையும் அன்னாரையே சாரும்.


உலகத்தமிழாய்வு மன்றத்தை நிறுவி- அதில் பல நாட்டு அறிஞர்களையும் ஒன்றிணைத்து உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் நடைபெற உரமூட்டிய பெருமையும் இவருக்கே.

உலகமொழி அறிஞர்களும், ஆய்வாளர்களும் போற்றும் பெருமைகள் பல பொருந்திய தனிநாயகம் அடிகளாரது பெருமைகள் எமது ஈழமணி நாட்டில் பரவலாகக் கொண்டாடப்படுவதன் மூலம் எமது எதிர்கால மாணவர் சமூகம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இந்த வகையில் மட்டக்களப்பிலும் இதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறாகத் தமிழ் மொழியை உலகளாவிய நிலைக்கு தனது பன்முக ஆற்றலால் கொண்டு சென்ற அடிகளாருக்குத் **"தென்றல்"** தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

- கலாபூஷணம் செல்லையா துரையப்பா -

## மூலிகை மருத்துவம்



# இருதய நோய் ஏற்படாது தடுக்க உதவும் வெள்ளைப்பூண்டு

19 ஆம் நூற்றாண்டில் அலோபதி எனும் ஆங்கில மருத்துவம் அறி முகப்படுத்துவதற்கு முன் எமது முன்னோர் **"உணவே மருந்து – மருந்தே உணவு"** என்ற 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சித்த மருத்துவத்தின் கோட்பாட்டைக் கடைப்பிடித்து நோய் நொடியின்றி உடல், உள ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வளமாக வாழ்ந்தனர். சமையலறையிலுள்ள சமையலுக்கு உபயோகிக்கும் பொருட்கள், வீட்டுச் சூழலில் இருந்த செடிகள்-மரங்கள்போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட மூலிகைகளைக் கொண்டு நோய்கள் ஏற்படாது தடுத்தது மட்டுமல்லாமல் ஏற்பட்ட நோய்களைக் கூடத் துல்லியமாகக் குணப்படுத்தியுள்ளனர்.

அவர்களுக்கு இருதயநோய் என்னவென்று தெரியாது. அவர்கள் தின மும் உட்கொண்ட ஆரோக்கியமான உணவுகள் இருதய நோய் பீடிக்காது தடுத்தன. மேலைத்தேய உணவுக் கலாசாரத்தைக் கடைப்பிடிப்பதாலேயே தற்போது 10 வயதுச் சிறுவர்களைக் கூட இருதயநோய் பீடித்துள்ளது.

இயற்கை அன்னை எமக்கு வாரி வழங்கிய வெள்ளைப்பூண்டு கறிகளுக்குச் சுவையூட்டுவதோடு – அரிய ஔடதமாகவும் செயற்பட்டு பல்வேறு தொற்று மற்றும் தொற்றா நோய்கள் எம்மைத் தாக்காதவாறு பாதுகாக்கும் கவசமாகவுள்ளமை பலருக்குத் தெரியாது. வெள்ளைப்பூண்டில் அபரிதமாக அடங்கியுள்ள அலிசின் (Allicin) என்ற இரசாயனப் பொருள் ஆரோக்கியத்தைப் பேணும் அபாரசக்தி வாய்ந்தது – எனப் பல்வேறு ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அலிசின் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியைத் தூண்டிவிடும் திறனைக் கொண்டுள்ளது. நோய் எதிர்ப்புச் சக்தி தூண்டிவிடப்படும் போது இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களும் (White corpuscles) நன்கு தூண்டி விடப்படுவதால் உடலினுள் உட்புகும் வைரஸ், பக்டீரியா போன்ற நோய்க் கிருமிகளைப் போர் வீரன் போன்று தேடிக் கொன்றழித்து எந்தவிதத்

தொற்று நோய்களும் தாக்காதவாறு பாதுகாக்கும். சுவாசத் தொகுதி நோய்களான ஆஸ்துமா, நியுமோனியா, வயிறு, குடல் நோய்கள், நீரிழிவு , அதிகரித்த உடற் பருமன்,புற்று நோய்கள் போன்ற நோய்கள் தாக்காதவாறும் பாதுகாக்கும். ஆங்கில மருத்துவர்கள் பரிந்துரை செய்யும் ஆண்டிபயோடிக் (Antibiolic) மருந்துகளை விடவும் அலிசின் வீரியம் மிக்கது.

இருதயநோயை ஏற்படுத்தும் காரணிகளுள் ஒன்றான அதிகரித்த கொலஸ்ரோல் என்ற கொழுப்பின் அளவை குறைக்க ஆங்கில மருத்துவர்கள் பரிந்துரை செய்யும் ஸ்டடின்( Statin) மருந்தைவிட மிகவும் வீரியமாகச் செயற்பட்டு உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்து இருதயநோய் ஏற்படாது தடுக்கும்- அபார திறனை வெள்ளைப்பூண்டு கொண்டுள்ளது.

கொலஸ்திரோலைக் குறைக்க ஆங்கில மருத்துவர்கள் பரிந்துரை செய்யும் ஸ்டடின் எனும் மருந்து பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்துவதால் அதன் பாவனையை இடைநிறுத்தும் நிலையேற்படவுள்ளது. ஆறு மாதங்களுக்கு மேல் தொடர்ந்து ஸடடின் பாவிப்பதால் நீரிழிவு, புற்றுநோய், ஞாபகமறதி , மூட்டுவலி போன்ற உபாதைகள் ஏற்படும் அபாயமுள்ளது என மருத்துவர்கள் அறிந்திருந்தும் அதனைத் தொடர்ந்து பரிந்துரை செய்கின்றனர். தினமும் 4- 5 வெள்ளைப்பூண்டைத் தட்டி அல்லது அரைத்துப் பச்சையாக உணவுடன் உட்கொண்டால் கொலஸ்ரோலின் அளவு குறையும்.

அளவுக்கதிகமான பாவனை மற்றும் தவறான பாவனை காரணமாக ஆங்கில மருத்துவர்கள் பரிந்துரை செய்யும் உயிர்காக்கும் அன்டியோடிக் ( Antibiotic) மருந்துகள் அவற்றின்வீரியத்தை இழந்து விட்டன. இதனால் அவற்றின் பாவனை இடைநிறுத்தப்படும் அபாயமுள்ளது. அவ்வாறான நிலையேற்பட்டால் சிறு காயங்கள் மற்றும் சத்திர சிகிச்சை மூலம் ஏற்பட்ட காயங்கள் ஆறாமல் புரையோடி மரணம் ஏற்படும் அபாயமுள்ளது.

புற்று நோயாளர்களுக்கு கடைசியாகக் கொடுக்கப்படும் மருந்தான கெமோதெருபி ( Chemothorapy) காரணமாகவே புற்று நோயாளர்கள் உயிரை விடுகின்றனர். வெள்ளைப்பூண்டு புற்று நோய் ஏற்படாமல் தடுக்கவும், ஏற்பட்ட புற்றுநோய்க் கலன்களை கொன்றழிக்கவும், அவை வேறு இடங்களுக்குப் பரவாமல் தடுக்கவும் உதவும்.

மேலைநாட்டு மருந்து தயாரிக்கும் கம்பனிகள் மேற்கொண்ட ஆய்வுகளில் வெள்ளைப்பூண்டின் அபார மருத்துவ வலிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மருத்துவ உலகம் விரைவில் வெள்ளைப் பூண்டை ஒரு சர்வதேச நிவாரணியாக அங்கீகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இப் பெருமை சித்த மருத்துவததையே சாரும்.

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

11

- ஆ.மு.சி.வேலழகன்-

மோனையை மேலும் விளங்கிக் கொள்ளும் வகையில் சீருக்குச் சீர் மோனையமைந்த இடங்கள் தடிப்பெழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1. இணைமோனை

( எ-கா) 1 ."**அணிமலர்** **2. அசோகின்** 3. தளிர்நலம் 4. கவிற்றி"

இந்த நான்கு சீர்கள் வரும் ஓரடிக் கவிதையில் முதற்சீருக்கும், இரண்டாம் சீருக்கும் மோனையமைந்த வகையிலே ஏனைய பெயர்களையுடைய மோனைகளுக்கும் எவ்வாறு சீர்களில் மோனை அமைகிறது எனப் பார்ப்போம்.

### 2.பொழிப்பு மோனை

(எ-கா) 1. **"அரிக்குரற்** 2. கிண்கிணி **3. அரற்றும்** 4. சீரடி"

### 3. ஒரூ உமோனை

( எ-கா) 1. **"அம்பொற்** 2. கொடிஞ்சி 3. நெடுந்தேர் **4. அகற்றி"**

### 4.கூழை மோனை

**( எ-கா) 1. "அகன்ற 2. அறிஞன் 3. அணிமலர்** 4. மார்பன்"

### 5.மேற்கது வாய் மோனை

**(எ-கா) 1. "அரும்பிய** 2. கொங்கை 3. **அவ்வளை 4. அமைத்தோள்"**

### 6.கீழ்க்கது வாய் மோனை

**(எ-கா) 1. "அவிர்மதி 2. அனைய** 3. திருநுதல் **4.அரிவை"**

### 7. முற்றுமோனை

**(எ-கா) 1. காதலியைக் காரிருளில் கானகத்துக் கைவிட்ட**

இதுவரை கூறியதைத் தொகுத்துக் கூறினால் :-

1. 1 -2 இல் வரும் மோனை இணைமோனை---- * *
2. 1 -3 இல் வரும் மோனை பொழிப்புமோனை---- * - * -
3. 1 -4 இல் வரும் மோனை ஒரூஉமோனை ---- *- - *
4. 1 -2 -3 இல் வரும் மோனை கூழைமோனை ---- * * * -
5. 1 -3 -4 இல் வரும் மோனை மேற்கது வாய் மோனை---- * - * *
6. 1 – 2 -4 இல் வரும் மோனை கீழ்க்கது வாய் மோனை---- * * - *
7. 1 -2 -3 -4 இல் வரும் மோனை முற்று மோனை---- * * * *

இங்கு கூறியது அளவடிக்கு- அஃதாவது நான்கு சீர்களையுடைய அடிக்கு உரியது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏழுவகை மோனைகளைத் தெரிந்து கொண்டால், அவை கவிதை இயற்றும் போது கருத்துக்கேற்றவாயும்- சொற்கள் கிடைப்பதற்கு ஏற்றவாயும் வந்தமையும் என்பதோடு – ஏனைய கவிஞர்களின் கவிதைகளில் உள்ள அடிகளில் வரும் சீர்களில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் இனங் கண்டு கொள்ளலாம்.

கவிதை இயற்றும் வழிவகைகளை படித்தால் மட்டும் கவிதை எழுதவும், கவிதையைப் படிக்கவும் யாருக்கும் ஆர்வம் வராது. பதிலுக்கு கவிதையின் இன்பத்தை – அதன் நயத்தைக் காட்சிப்படுத்திப் பார்க்க வேண்டும்.

அந்த வகையில் **"இராமயணத்தில் கம்பன்"** இராமன் மிதிலை நகர வீதி வழியாகச் செல்லும் காட்சியையும் - அதனைக் கண்ட சீதை மனதாலே அடையும் இன்னலையும் கம்பன் காட்டும் வகையிலே பார்ப்போம்.

இராமன் மிதிலை வழியாக நடந்து செல்கிறான். கையிலே நாணோடு கூடிய வில்லையும் ஏந்திச் செல்கிறான். தோளின் மேல் கட்டிய அம்பாரத் தூணியும் தனியான அழகைத் தருகிறது. மார்பில் வெண்மையான பூணூல் கிடக்கிறது. அது சந்திரனுடைய ரேகையான ஒளி வந்து கிடப்பது போன்றதொரு தோற்றம் ! இந்த அழகிய கோலத்தில் இராமனைப் பார்க்கிறாள் சீதை. இராமனும் சீதையைப் பார்க்க நேருகிறது. இந்நிலையில் இருவர் கண்களும் கலந்து கொண்டன.

இந்நிலையில் நடந்து செல்லும் இராமன் தெருக்கோடியில் மறைந்து விடுகிறான். ஆனால் சீதையின் உள்ளத்தை விட்டு மறையவில்லை. கண்ட கோலத்தை அப்படியே பார்த்த வண்ணமாய் தன்னையே மறந்து இருக்கிறாள். மேலும் உணர்வு பெற்றவளாக **"நமக்குக் கிட்டாத செயலல்லவா இது"** என்று எண்ணி – எண்ணி இப்படியும் - அப்படியுமாக தத்தளிக்கிறது சீதையின் உள்ளம். இந்நிலையில் தன்னந்தனியாக அழுகிறாள். அவள் அழுகையை கம்பன் கவிதையில் வடிக்கும் பாங்கினைப் பார்ப்போம்.

**"நாண் உலாவு வில்லி னோடு**
**பூண் உலாவு பாணியும்**
**தூண் உலாவு தோளும் வாளி**
**யோடு லாவு தூணியும்**
**வாள் நிலாவின் நூல் உலாவு**
**மாலை மார்பும் மீளவும்**
**காண லாகும் ஆகின் ஆவி**
**காண லாகும் ஆகு மே"**

சீதை மேலும் அழுது புலம்புவது :- பாற் கடலிற் பிறந்த தேவாமிர்தம் பொற்கிண்ணத்தோடு ஒருவருக்குக் கிடைத்தது. அதைக் கீழே போட்டு விட்டான்- அந்தச் சிந்தனை அறிவு இல்லாத அசடு. நானும் அந்தச் சிந்தனை அறிவில்லாத அசடனது நிலையில்தான் இருக்கிறேன். இராமனை அடைவதற்கு வேண்டிய செயலை உடனே செய்யாமல் இருந்து விட்டு இப்போது வருந்துவது என்ன செயல் என்றபடி :-

**"பெய் கடலப் பிறந்த யல்ப்**
**பிறக் கொணாம ருந்து பெற்( று)**
**ஐய ! பொற்க லத் தொடங்கை**
**விட்டிருந்த ஆதர் போல்**
**மொய் கிடக்கும் அண்ணல் தோள்**
**முயங்கிடாது முன்னமே**
**கைகடக்க விட்டிருந்து**
**கட்டு ரைப்ப (து) என்கொலோ"**

என எவ்வளவோ இலகுவான நடையில் எதுகை, சந்தம் அமையப் பார்ப்போம்; படிப்போம். தொடர்ந்து மோனை பற்றிய விடயத்திற்கு வருவோம். நான்கு சீர்களையுடைய **"அளவடிக்க"** விதையில் முதற்சீரிலும், மூன்றாம் சீரிலும் மோனை வருதல் சிறப்பாகும். வெண்பா, அகவல், கலிவிருத்தம், கொச்சகம் எனும் நான்கு அடிகளையுடைய பாக்களில் முதற்சீரிலும், மூன்றாம் சீரிலும் மோனை வந்தால் ஓசைநயம் அமையுமென்பர்.

(எ-கா) 1. **"முந்திக்** தவங்கிடந்து **முந்நூறு** நாட்சுமந்து
**அந்திபக** லாச்சிவனை **ஆதரித்து"**

இது பட்டினத்தார் தம் தாயார் இறந்தபோது பாடிய வெண்பா.

(எ-கா) 2. **"முன்னீர்** மடவார் **முறுவல்** திரள்குவிப்ப
**நன்னீர்** அயோத்தி **நகரடைந்தான்"**

இது நளவெண்பாக்களில் ஒன்று. அதிலும் இரு இரு அடிகள் மட்டுமே.

மேலே குறிப்பிட்டது போல் நான்கு சீர்களில் வரும் நான்கு அடிகளைக் கொண்ட இரு வெண்பாக்களில் முதல் வெண்பா பட்டினத்தடிகளால் பாடப்பட்டதும், இரண்டாம் வெண்பா நளவெண்பாவாகும். இந்த இரு வெண்பாக்களிலும் இரண்டு - இரண்டு அடிகளை மட்டுமே எழுதியுள்ளேன். இதனை நன்கு கவனித்துப் படியுங்கள்.

**(தொடரும்...)**

- கலாபூஷணம் ஏறாவூர் தாஹிர் -

# யார்?

நல்லொழுக்கம், நற்பண்பில்
நன்னடத்தை, நற்குணத்தில்
நடைபோட நினைக்கையிலே
தடைபோட்டு மறிப்பது யார்?

இதயக் கறை கழுவி
இருட்டறையில் விளக்கேற்றி
உதயம்பெற முனைகையிலே
உள்ளிருந்து தடுப்பது யார்?

மன்னிக்கும் பக்குவத்தில்
மாற்றாருடன் உறவை
புதுப்பிக்கப் புறப்பட்டால்
புறம் தள்ளி விடுவது யார்?

சொல், செயலில் விட்டபிழை
சோரம் போய்க் கிடந்த நிலை
மறைந்த நிலை மறக்கையிலே
மறுபடியும் புரிவது யார்?

சுதி, நாசம், பழி, பாவம்
சஞ்சரிக்கும் தொடர்பறுந்து
மதிபுதுக்கி மகிழ்கையிலே
மந்தியெனக் குதிப்பது யார்?

எல்லாரும் எல்லாமே
பெற்றிலங்கி வாழ்வடையும்
எண்ணம் துளிர்க்கையிலே
எட்டப்பன் ஆவது யார்?

உள்ளறையுள் உட்கார்ந்து
ஊசாட்டங்கள் பெருக்கி
குள்ளத்தனம் குவிக்கும்
**"மனம்"** என்னும் மந்தியே தான்!!!

# புதிய வரவுகள்




**நூல்** :- பள்ளிச் சட்டையும் புத்தகப் பையும்.

**ஆசிரியர்** :- நிலா தமிழின்தாசன்

**முகவரி** :- கல்லடி வீதி
களுதாவளை-01
களுவாஞ்சிகுடி .

**விலை** :- 200/=

1985 தொடக்கம் 2012 வரையான இவரின் 14 சிறுகதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. காதல், போரின் கொடுமை, உறவுகளுக்கான தியாகம், சபலமும்- உடல் வேட்கையும், இடப்பெயர்வுகளின் அவலம், மூவின மக்கள் இணக்கமும் - புரிந்துணர்வும், இடம் பெயர்ந்தவர் இழப்பும் - அவர்களால் பிழைப்பவர் மனநிலையும் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இவரது சிறுகதைகள் அமைந்துள்ளன. இவரின் அடுத்த சிறுகதைத் தொகுதி விரைவில் வெளிவர வேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது .

---




**இறுவட்டு** :- சிலம்புச் செல்வி

**பாடலாக்கமும்** :-

**தயாரிப்பும்** :- ஆரையூர் அருள்

**இசை** :- சதீஸ்

இவ் இறுவட்டில் ஆரையம்பதி கண்ணகியம்மன் புகழ்பாடும் பாடல்கள் நம்மவர் தயாரிப்பில், இசையில், குரலில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். எமது புகழ் பூத்த கவிஞரான ஆரையூர் அருளின் 19 ஆவது வெளியீடாகும். இவ்விதம் இசை வடிவங்கள் ஆவணப்படுத்தும் செயற்பாடுகள் எமது மட்டக்களப்பு மண்ணில் தொடர்வது பாராட்டுக்குரியது .




இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் எம்மை அழகுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு **"தென்றல்"** இவ் இதழில் இருந்து அழகுக்கலை தொடர்பான Fwpg; gvkJ thrfufS ffhf toqFfpwJ . (M +ர்)

- ஆ.தாட்ஷாயினி- Diploma in Beauty Culture - இருதயபுரம்.

## முகச் சுருக்கத்தைத் தடுப்பதற்கான வழிகள்


பொதுவாக – வயது, மன அழுத்தம், வறண்ட சருமம் இவைகளே சுருக்கம் வருவதற்கான முக்கிய காரணங்களாகும். முகத்தில் கண்களைச் சுற்றிய பகுதி, வாயின் ஓரம், கழுத்து ஆகிய பகுதிகளில் சுருக்கம் இலகுவாகத் தெரியும். கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் சுருக்கங்களைத் தவிர்த்து என்றும் இளமையாக வாழலாம்.

- குளிர்ந்த பாலில் எலுமிச்சைச் சாறு சில துளிகள் இட்டு நன்கு கலந்து சுருக்கங்கள் உள்ள பகுதிகளில் பூசி சுருக்கத்திற்கு எதிர்ப்பக்கமாகத் தேய்ப்பதன் மூலம் சுருக்கம் மறையும்.
- பாதாம் எண்ணையை பூசி மேல் நோக்கி மசாஜ் செய்து ஒரு இரவு முழுவதும் விட்டு காலையில் வெது வெதுப்பான நீரில் கழுவி விடுவதன் மூலம் விரைவிலேயே சுருக்கத்திலிருந்து விடுபடலாம்.
- அரிசி மாவுடன் தேனைக் கலந்து முகத்திற்குப் பூசி 1/2 மணித்தியாலத்தின் பின் கழுவி விடுவதன் மூலம் நல்லதொரு வித்தியாசத்தைக் காணலாம்.
- நன்கு பழுத்த பப்பாளிப் பழத்தைப் பூசி சிறிது நேரத்திற்குப் பின் கழுவி விடவும். பப்பாளிப் பழம் முகச் சுருக்கத்திற்கு நல்ல மருந்தாகவும், திறந்த துவாரங்களை மூடவும் துணைபுரிகிறது.
- விற்றமின் E எண்ணையுடன் சிறிதளவு கிளிசரின் கலந்து பூசி 20 நிமிடத்தின் பின்னர் கழுவி விடவும். இவற்றில் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்து தொடர்ந்து ஒரு மாதத்திற்குப் பின்பற்றுவதன் மூலம் நல்லதொரு வித்தியாசத்தைக் காணலாம்.

## படமும் - பதிவும்

- ரவிப்ரியா -

# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" இன் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கண்ணகி கலை இலக்கிய விழா- 2013



பேராசிரியர் சி .மௌனகுரு தலைமையுரையாற்றுகிறார்.



நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வு.




கலாநிதி அரிமா அ .செல்வேந்திரன் **"கூடல்"** (பரல்-2 ) –விழாச் சிறப்பு மலரினை அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத் தலைவர் க. கார்த்திகேசுவுக்கு வழங்குகிறார்.



நிகழ்வில் கலந்து கொண்ட பேராளர்கள்.





மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் ( தேசிய பாடசாலை) 94 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இடம்பெற்ற எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஊர்தியைப் படத்தில் காணலாம்.



துறவற வாழ்வில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த அருட்சகோதரி கே.தவமலருக்கான பாராட்டு விழா பெரியகல்லாறு அருளானந்தர் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அருட்சகோதரி மற்றும் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆகியோர் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.



கோட்டைக்கல்லாறு தெய்வநெறிக் கழக அறநெறிப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் சிறந்த சேவையாற்றி வரும் கழகப் போசகர் எஸ்.இராஜரெட்ணத்துக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



மட்டக்களப்பு ஆரையம்பதி இராமகிருஷ்ண மகா வித்தியாலய தரம் - 01 மாணவர்களின் சித்திரைப் புத்தாண்டு விழாவில் - ஆசிரியை திருமதி.வ.திருச்செல்வம் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

சிறுகதை

# அர்ப்பணங்கள்



-ஆத்மராஜா றூத் சந்திரிக்கா-

கண்டியிலிருந்து கனவேகத்தோடு முன்னேறியது பேரூந்து. ரியூட்டரிக் கும்பலின் அட்டகாசம், சிரிப்பலைகள் செவிப்பறை அத்துமீறல்களானது . இதமான சிதோஷ்ணம் பயண அலுப்பை விரட்டியது.

**"பேசாம இருங்க மகன்..... கெதியா வீட்ட போகலாம்"** மிகச் சமீபமாய் அந்தப் பெண்ணின் குரல். பரிச்சயமான குரல் கேட்டுத் திரும்பினேன். ஆயிரம் வோற் பாய்ச்சிய கண நேர அதிர்ச்சி .

**"சில்மியா கபூர்"**

**"ஏய் ஏன் உறைஞ்சிட்ட?"** பின்னுக்கு இருக்கும் போதே உன்ன அடையாளம் கண்டிட்டேன்.

எங்க போறா இப்ப....?

சமநிலை தாவிப் பதில் சொல்ல எனக்கு வெகு நேரம் பிடித்தது...... அலையலையாய் வினாக்கள் அகத்தே பொங்கிப் பிரவாகித்தன.

சில்மியாவுக்கு எப்பிடி இந்த வயதில் ஒரு குழந்தை? எப்போது திருமணமானது **"எப்படி...? எப்போது...?"** நிறையக் குழம்பிப் போனேன். தொண்ணூற்றி இரண்டாம் ஆண்டு கூட இரண்டாம் முறையாய் ஏயெல் பரீட்சைக்குச் சல்வார் கமீஸில் குதித்து வந்தவளுக்கு இதெப்படி சாத்தியம்? ஐந்து வயது முடிந்த குழந்தையோடு குடும்பப் பெண் முத்திரை வேறு.

**"என்னப்பா எக்கச்சக்கமாய்த் திணர்றாய்- உம்மைப் பற்றித்தான்"**

**"இப்ப எங்க போகப் போறாய்?"**

**"கேகல்ல"**

**"அவசரமில்லையெண்டால் மாவனல்லையில இறங்குமன்... நிறையக் கதைக்க வேண்டியிருக்கு."**

ஆமோதித்து விட்டேன்.

இந்தக் குழப்பத்துக்கு விடையில்லாமல் போனால் என் தலையே வெடித்து விடும்போல இருந்தது. என் பயண நோக்கமே திசை திரும்பி விட்டது சில்மியாவால். இந்த நான்கு வருடங்களில் ஏற்பட்டிருக்கும் சடுதியான மாறுதல்கள் பற்றி அறியாமல் போவதில்லையெனத் தீர்மானித்து விட்டேன்.

**"மம்மி ... பிஸ்கட் வேணும் பிஸ்கட்"** என்று சில்மியா மடியில் இருந்த அவள் புத்திர பாக்கியம் வேறு அலறிக் கொண்டிருந்தான். இப்போது ரியூட்டரிக் கும்பலின் அட்டகாசம் பெரிதாய்ப் புலப்படவில்லை... சிந்தனை திசைமாறி விட்டது சில்மியாவால்.

நினைவு தாவினேன்.

எண்பதுகளில் சில்மியா குடும்பம் யாழ்ப்பாண டவுணில் அரிசி ஆலையும், ஹாட்வெயார் ஸ்ரோரும் வைத்துக் குடியிருந்தது. இனமுரண்பாடுகள் முகிழ்ப்படாத காலத்தில் என் பால்ய சினேகிதி. தொண்ணூறில் அவர்கள் வடபுலத்திலிருந்து வெளியேறி புத்தளம் போய் விட்டதை அறிந்திருந்தேன். சில்மியாவுக்கு ஒரு அக்காவும், ஒரு அண்ணாவும் இருந்தார்கள். அக்கா திருமணமாகிக் கண்டி குடியேறி விட்டதும் - அண்ணா பாதுகாப்புப் படையில் வேலையாக இருந்ததும் தெரியும். யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளத்துக்குப் போய் இரண்டு மாதத்தில் அவள் வாப்பா மாரடைப்பால் இறந்து போனதை பர்வீன் எழுதியிருந்தாள் கொழும்பிலிருந்து.

**"ம்...இறங்குமப்பா வீட்ட போவம்"** கலைந்தேன்.

பரபரப்பான மாவனல்ல பஸார் கடந்து சமாந்தரமாய் நடந்தோம்.

எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

அதிகபட்ச ஆடம்பரமில்லாத மத்தியதர வீடு. அழுது கொண்டு வந்த குழந்தை கட்டிலில் விழுந்து தூங்கி விட்டது. **"ஈவினிங் போகலாம் நிறையக் கதைக்க வேண்டியிருக்கு. நிறையக் காலங்களுக்குப் பிறகு இப்படியொரு நிர்ப்பந்தமான சந்திப்பு . உம்மக் கண்டதும் எவ்வளவு சந்தோஷமாயிருக்கு"** என்று விட்டு உடைமாற்றி வந்தாள். மௌனத்தில் நேரம் கரைந்தது.

**"வலியவே உடைக்கட்டும் அவசரப்படாதே ! ஒரு நீண்ட ஆழமான மௌன அலறல் குமுறிட்டுப்போகிறது – என ஆழ்மனம் அடித்துச் சொல்லிற்று. அவளாகவே சொல்லட்டும் அவசரப்படாதே எதையும் கேட்காதே".**

உடலின் சகல தூண்டல் நிலையங்களில் இருந்தும் - செய்தி பறந்து வந்தது. எனக்குள் சைரன் ஒலித்தது.

**"அலட்... அலட்...."**

**"இப்போ என்ன செய்றாய் அகல்யா"**

**"கொம்யூனிகேசன் டிகிரி"**

**"எதுக்குக் கேகல்ல வந்த"**

**"சிங்களக் கல்சர் றிசேச்சிங்குக்கு"**

**"எத்தினை நாள் நிப்ப"**

**"ரெண்டு மாசம்"**

**"ஓ.. அப்படீன்னா அடிக்கடி வந்து போவியா? ப்ளீஸ் சரேலென என் கரம் பற்றினாள்.**

**இரு சோடி விழிகளும் குமுறிட்டன. வாரி இறைத்தன.**

**"வாப்பா மௌத்தானப்புறம் புத்தளத்திலிருந்து – கண்டிக்கு வந்திட்டம். ஏயெல் என்ரன்ஸ் கிடைக்கல்ல. பாதையே மாறிப் போச்சு. இடம்பெயர்ந்தப்புறம் நானா.. தொண்ணூத்தி மூணுல ஒரு மோதல்ல மௌத்தாகிட்டார்".**

**"ஓ...ஹு"**

**"போன இயர்ல ராத்தா பிரசவத்தில் மௌத்தாகிட்டா"**

**ஜரீத்தா... குடும்பம்பற்றியேஅதிர்ந்திருக்கிச்சு.... றமீஸ்ம் , சுமியாவும்**

வளர்ந்திட்டாங்க. பிறந்த குழந்தையும் நாலு வயது ஷெப்ராலும் தவிச்சுப் போயிடக் கூடாதெங்கிறதுக்காக நான் இதை ஏத்துக்கிட்டன்". "அவ வளர்த்து ஆளானவ நான், அவ பிள்ளையள தவிக்க விடுகிறது நியாயமான்னு மனம் கேட்டுது, அர்ப்பணிச்சிட்டன்".

"இருந்தாலும் உன் லைப்ப...நீ...."

"ஓ...நோ.... அர்ப்பணங்கள்ல வாழ்வு முழுமையடையுதென்று நெனைக்கிறன் அகல்யா. இந்தக் குழந்தைகளோட எதிர்காலம்தான் என் வாழ்வோட லெச்சியம். என் பிறப்போட பெறுமதி ".

மௌனமான ஒரு மயக்கம் என்னுள். "நிக்கிற ரெண்டு மாசத்லையும் நிறைய வந்து போ அகல்யா. நான் நிறையச் சந்தோசப்படுவன் நம்ம சந்திப்புக்களால".

"ஓ...நிச்சயமாய் !"

மாலை மங்கிக் கொண்டு வந்தது. கனத்த இதயத்தோடு விடைபெற்றேன். ஒரு மான்குட்டியாய் குதித்துக் குதூகலிக்கும் என் ப்ரிய சில்மியா, நீண்ட மௌனத்தோடு - இடுப்பில் குழந்தையோடு விடை கொடுத்தாள். கையசைத்துத் தெருவில் இறங்கினேன். மனம் முழுவதும் சோகச்சுமை.

## கூப்பன் இல-04

முழுப்பெயர் :- ..........................................................

முகவரி :- ..........................................................

..........................................................

இவ்விதம் வெளிவரும் கூப்பன்களை சேகரித்து வையுங்கள்.

25ஆவது இதழ் வெளிவருகையில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூவருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழாங்கப்படும்.




# இந்துமதத்தின் தொன்மையும் இலங்கையில் அதன் தாக்கமும்

எஸ்.எதிர்மன்னசிங்கம்
முன்னாள் கலாசார உதவிப் பணிப்பாளர்

கி .மு 2000 ஆண்டில் நிலவிய பெருங்கற் பண்பாட்டில் ஆதிச்ச நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட தடயங்க ளான சேவற்சிலை, காவடிச் செதில்கள், வேல் என்பன இங்கு முருக வழிபாடு சிறப்புற்றிருந்தமை யைக் குறித்து நிற்கின்றன. பெருங்கற் பண்பாடு தமிழருக்குரிய தென்பதும் முருக வழிபாடு மிகப்பழமையானது என்பதும் இதன் மூலம் புலனாகிறது. கி .மு முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் இயற்றப் பட்டதாகக் கொள்ளப்படும்- எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கி யங்களும்- தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலும் சைவக் கடவுளர் பற்றியும்- சைவ சமயத்தின் பெருமை பற்றியும் குறிப்பதைக் காணலாம்.

முருகன், திருமால், இந்திரன், கொற்றவை, இலக்குமி , சிவன் ஆகிய தெய்வங்கள் பற்றி ஆங்காங்கே பாடல்கள் உள்ளன. **"வெல்லும் போரை வல்ல முருகன்"** என்று மலைபடுகடாமில் பாடல் வரிகள் காணப்படுகிறது. **"அணங்குடை முருகன் கோட்டத்து"** எனப் புறநானூற்றில்முருகனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. திருமுருகாற்றுப்படை என்னும் இலக்கியத்தில் முழுக்க முழுக்க முருகப் பெருமானுடைய புகழே பேசப்படுகிறது.

அடுத்து கொற்றவை என்னும் வெற்றித்தாய் பற்றிய குறிப்புக்கள் இந்நூலில் உள்ளன. முருகனின் தாயாகக் கொற்றவை கருதப்பட்டு வழிபாடு செய்யப்பட்டாள். **"வெற்றிவேல் கொற்றவை சிறுவ"** என வரும் பாடல் அடிகளில் இதனைக் காணலாம். சிவன் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களால் முக்கிய வழிபாட்டுத் தெய்வமாகக் கொள்ளப்படவில்லை. ஏழாம் நூற்றாண்டில் சைவ நாயன்மார் தொடங்கிய சைவ மறுமலர்ச்சியின் பயனாகவே

சிவபெருமான் சிறப்புள்ள தெய்வமாகக் கொள்ளப்பட்டார். பத்துப் பாட்டில் நான்கு இடங்களில் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

**"நீரும் நிலனும் தீயும் வளியுமாக**
**விசும்போடைந்து டனியற்றிய**
**மழுவா னெடியோன்"**

என மதுரைக் காஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப் படையில் **"ஆல்கெழு கடவுள்"** எனக் காணப்படுகிறது. விஷ்ணு எனும் தெய்வ வழிபாடும் சங்க காலத்தில் பிரபல்யம் அடையவில்லை. பின்னர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆழ்வார்களே தமது திருப்பாசுரங்களில் பாடியுள்ளனர். இவை நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஆனால் வேதங்களில் விஷ்ணு வழிபாடு சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. விஷ்ணு பற்றிப் புறநானூற்றில் **"நீனிறவுருவினேமியோன்"** எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. நற்றிணை என்னும் இலக்கியத்தில் **"மாயோனன்ன மால் வரை கவா அன்"** என்னும் வரிகள் விஷ்ணு பற்றிக் கூறுகிறது.

அடுத்து இந்திரன் எனும் தெய்வத்தைப் பற்றி சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே குறிப்புக்கள் உள்ளன.

**"ஒண்டொடி வச்சிரத் தடக்கை**
**நெடியோன் கோயிலுள்"** — பு. நா

**"இந்திர விழாவிற் பூவினன்ன"** — ஐங்குறு நூற்றில் காணப்படுகிறது. ஏனைய வருணன், இலக்குமி (திருமகள்), பிரமா ஆகிய கடவுளர் வழிபாடும் மக்களிடையே இருந்ததை சங்கப் பாடல்களில் ஆங்காங்கே காணப்படும் குறிப்புக்களில் இருந்தும் கண்டு கொள்ளலாம். தொல்காப்பியம் எனும் எமது பழமையான இலக்கண நூலில் தொல்காப்பியர் இத் தெய்வங்களை நில அடிப்படையில் வகுத்துக் கூறியுள்ளார். சங்க காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் நில அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டமையை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

தொல்காப்பியரும் :-

**"மாயோன் மேய காடுறையுலகமும்**
**சேயோன் மேய மைவரையுலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி , மருதம், நெய்தல் என**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**

என்று கூறியுள்ளார். இதன்படி விஷ்ணு வழிபாடு முல்லை நிலத்திலும், முருக வழிபாடு குறிஞ்சி நிலத்திலும், இந்திரன் மருத நிலத்திலும், வருணன் நெய்தல் நிலத்து மக்களா லும் வழிபடப்பட்டனர் என்பதைக் கண்டு கொள்ள முடிகிறது. தொல்காப்பியர் தனது பொருள் அதிகாரத்தில் முருகனைப் பற்றிக் குறிப்பிடும் போது :-

**"வெறியறி சிறப்பின் வெல்வாய் வேலன்**
**வெறியாட்டயர்ந்த காந்தளும்"**

எனக் கூறியுள்ளார். சமய வழிபாட்டிற்குச் சடங்கு முறைகளே கைக்கொள்ளப்பட்டன. வேலன் ஆடல், வெறியாட்டு, துணங்கை கூத்து, குரவைக் கூத்து போன்ற ஆடல் வகைகள் மக்கள் சமய வழிபாட்டில் முக்கிய இடம் பெற்றிருந்தன. இவற்றின் மூலம் சைவத்தின் தொன்மையையும், சிறப்பையும் நன்கு கண்டு கொள்ளலாம்.

**(தொடரும்...)**

## முகப்பில்..............

**அம்பாறை ஆலையடிவேம்பு 236 மத்தியஸ்தர் சபை க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் மருத்துவப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் நான்காம் இடத்தையும் பெற்ற அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் தேசிய பாடசாலை மாணவி தணிகாசலம். தர்ஷிகாவைப் பாராட்டிக் கௌரவிப்பதைக் காணலாம்.**

# நாட்டாரியல் ஓர் ஆய்வு

கலாபூசணம் ஆரையூர் அருள்

8

**"சாவலுமோ என்னழகு லேலேலைங்கடி லேலோ**
**கூவுதில்லை கொற்றவரே லேலேலைங்கடி லேலோ**
**அன்னம்போல நடைநடந்து லேலேலைங்கடி லேலோ**
**வாறாளே பெண்ணொருத்தி லேலேலைங்கடி லேலோ"** இப்பாடல் தொடர்ந்து பாடப்படும். இவ்வாறு பல்வேறு தொழில்களையும் செய்யும் போது நாட்டுப்புற மக்கள் பல்வேறு வகையான தொழிற்பாடல்களையும் இனிய ஓசையுடனும், மண்வாசனையுடனும் பாடுகின்றனர். இப் பாடல்களில் சமய நம்பிக்கைகளும், ஒழுக்க உணர்வுகளும், அவ்அவ் சமயங்களின் தத்துவங்களும் நம்பிக்கைகளும் மலிந்து காணப்படுவதனை பார்க்கலாம்.

தோணிக்காரன் பாடலில்

**"மீரா மீரா நாகூர் மீரா**
**விண்ணப்பந் தருவீரா**
**ஒருமுழத்தோணி ஒன்பதுபலகை**
**கொண்டோடச் செய்மீரா**
**பாய்கிழிந்தது பாய்மரம்உடைந்தது**
**பதறுமே என்மனைவி!**
**குஞ்சுகுழந்தை முகத்தில்முளிக்க**
**கொண்டோடச் செய்மீரா..."** என்றும்

தேயிலைத்தோட்ட தொழிலாளர் பாடலில்,

**"வாடை அடிக்குதடி வடகாத்து வீசுதடி**
**சென்னல் அடிக்குதடி நாம்சேர்ந்துவந்த கப்பலிலே**
**எண்ணிக் குழிவெட்டி இடுப்பொடுஞ்சி நிக்கயிலே**
**வெட்டு வெட்டு எங்கிறாரே பொட்டுவைச்ச கங்காணி**
**ஆற்றோரம் கொந்தரப்பு அதுநெடுக வல்லாரை**
**வல்லாரை வெட்டியல்லோ என்வல்லமை கொறஞ்சுதையா**
**ஊரானஊர் இழந்தேன் ஒத்தப்பனை தோப்பிழந்தேன்**
**பாரான கண்டியிலே பெற்றதாயும் வீடிலந்தேன்"**

கும்மிப்பாடலில் ஒரு வகை குறவஞ்சியர் கும்மி. இப்பாடலில் தாங்கள் யார், தாங்கள் வழிபடும் குறவள்ளி கந்தன் எப்படி பட்டவர், எங்கு வாழ்கின்றார் என்பதை இனிய தருவுடன் அக்கால குறவர்கள் பாடிய பாடலில்

**"குன்று மலை வாழுங் குறவரடி-நாங்கள்**
**குனிந்து நிமிர்ந் தாடுங் கும்மியிதடி**
**குன்றாத யின்பமடி குறவஞ்சியே நமக்குக்**
**குறையொன்று மில்லையடி குறவஞ்சியே**
**வள்ளி மணவாளன் வடிவேலன்-நம்மை**
**வாழவைக்க வேண்டுமடி வனவஞ்சியே**
**புள்ளிமயில் ஏறும் வள்ளளவனை-நாங்கள்**
**போற்றி மகிழ்ந்தாடிடுவம் வனவஞ்சியே**
**மாணிக்ககங்கையிலே தீர்த்தமாடி-ஓடி**
**மண்டூரிலே வந்து அமுதுண்ணுவான்**
**மாவலிகங்கையிலே தீர்த்தமாடி-ஓடி**
**வந்துசித் தாண்டியிலே மயிலேறுவான்"** என்றும்

மலைநாட்டுத் தோட்ட தொழிலாளபெண்ணொருத்தியின் குணவியல்பு, அவளது பருவ சிறப்புக்களை கூறிக் தன்னை மணம் செய்து கொள்ள கேட்பது போல் பின்வரும் கும்மியில் சிலவடிகளை சுட்டி நிற்கின்றேன்.

**"கும்மியடி பெண்கள் கும்மியடி**
**கோவிலங்காயை குலுக்கியடி...** என்று தொடங்கி
**பட்டை மரத்திலே தொட்டில்கட்டி**
**பச்சைபாய்களை போட்டாட்டி**
**மின்னிட்டாம் பூச்சியில் விளக்கேற்றி**
**வேடிக்கை பார்க்கிறாய் வீராயி**
**சந்தனப் பொட்டடி நானுனக்கு**
**சந்து சவ்வாதடி நீயெனக்கு**
**சந்தனப் பொட்டுக்கும் சாந்து சவ்வாதுக்கும்**
**சம்மதமோ முத்து வீராயி**
**குத்து விளக்கடி நானுனக்கு**
**கொவ்வை பழமெடி நீயெனக்கு**
**குத்து விளக்குக்கும் கொவ்வை பழத்துக்கும்**
**சம்மதமோ முத்து வீராயி"** என்றும் பாடுவர்.

**(தொடரும்...)**

# “ தென்றல் ” குறுக்கெழுத்துப் போட்டி இல – 12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | | ■ | 8 | | |
| | ■ | 9 | | | ■ | | ■ |
| 10 | 11 | | ■ | ■ | 12 | ■ | 13 |
| ■ | 14 | | 15 | | | ■ | |
| 16 | | | | ■ | ■ | 17 | |
| 18 | | ■ | ■ | 19 | 20 | | ■ |
| | ■ | 21 | | | | ■ | 22 |

## இடமிருந்து வலம்

01 . பட்டருக்கு முன் ஒட்டிக் கொண்டது.

04. மாதாந்தம் வெளிவரும் சஞ்சிகை.

07. அன்னை.

08. பரீட்சையில் வெற்றி .

09. முருக்குப் பெருத்து இது ஆகாது.

10. அறுவகைச் சமயங்களுள் ஒன்று. (குழம்பியுள்ளது)

14. கதிரவன்.

16. நண்பர். ( குழம்பியுள்ளது)

17. வாகன விபத்துக்கு இதுவும் ஒரு காரணம்.

18. வேற்றுமை உருபுகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)

19. நாணயப் பெறுமதி .

21. ஆகாய கங்கை. (திரும்பியுள்ளது)

22. ஆங்கிலத்தில் இல்லை. தமிழில் வேதனை.

## மேலிருந்து கீழ்

01 . இருள் மிகுந்த இரவு .

02. தெய்வங்களுள் ஒருவர்.

03. அதிகம்.

04. மாலைதீவுக் கருவாடு.

05. வசந்தகாலப் பண்டிகை. **“தி”** யைக் காணவில்லை.

06.பாதுகாப்பாகப் பேணப்படும் அரசாங்க விருந்தாளி .

09.வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பணமோசடி செய்யும் இப்படிப்பட்ட போலிகளும் உளர். ( குழம்பியுள்ளது)

11. இப்படியாக வாழ்வதையே எல்லோரும் விரும்புகின்றனர். (தலைகீழ்)

12. மந்தரைக்கும் இதற்கும் தொடர்புண்டு.

13. குரு இல்லா விட்டால் இது பாழ் போகும் என்பர்.

15. ஒன்றுக்கு மேற்பட்டது. (தலைகீழ்)

16. இது உடையவர்களின் எலும்பும் பிறருக்கு உரியதாம்.

17. எழுத்து மாறினாலும் கருத்து மாறாமல் ஒத்திருப்பது.

19. சங்ககாலத் தோழி .

20. இது போனால் **“சொல்”** போகும் என்பது பழமொழி .(தலைகீழ்)

- ✳ விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
- ✳ தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ✳ முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/- 200/-, 100/- வழங்கப்படும்.
- ✳ போட்டி முடிவுத்திகதி 15. 09. 2013
- ✳ விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல.12**
**44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி,**
**மட்டக்களப்பு.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 11 இற்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சீ | தை | | 2 மா | 8 த | 9 வி |
| 3 வ | டு | | 4 த | ரி | சு |
| 5 க | க | ன | ம் | | ம் |
| ன் | | | | 11 ம | பு |
| | 10 லை | 6 த | | து | |
| 7 கா | கு | டி | ன் | த் | தா |

## "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல. - 11 இல் வெற்றி பெற்றோர்

### முதலாம் இடம்

த. மயூரன்
கூமாங்குளம்
வவுனியா.

### இரண்டாம் இடம்

ச. பிரியவதனி
திருப்பழுகாமம்-1
பெரிய போரதீவு .

### மூன்றாம் இடம்

ம. மீனா
சாகாமம் வீதி
அக்கரைப்பற்று .

### பாராட்டுப் பெறுவோர்

- **த. உதயா**
  **குருக்கள்மடம்.**
- **வ.தயாநிதி**
  **பெரியகல்லாறு.**
- **ஊ .கீதா**
  **களுவாஞ்சிகுடி.**
- **இ. மீரா**
  **கொழும்பு.**



ஆரையம்பதியில்......
அழகிய ௨௨ கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்ய
வேண்டிய ஒரே இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி
அபிராமி ஜீவல்ஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008



அம்மன் துணை
லக்ஷனா
கொம்பியூட்டர் சீல்
Pre - Ink (Five Colour)
Polymer Stamp
ஒரு மணித்தியாலத்தில்
தரமாக செய்து தரப்படும்.
வெயிலி வீதி. அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே : 065 36 470 57, 077 69 155 74.
E-mail -ladshana@gmail.com
AD/0024


மட்டு நகரில்......
அழகிய 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய
தங்க நகைகளின் சொர்க்காபுரி
சுபாஜினி
ஜூவலரி
51, பிரதான வீதி
மட்டக்களப்பு.
தொ.பே: 065-2224863
AD/0005

# விலங்குகளின் விநோதம்

- சி.டானியல் -



# உயிர்ப்பதற்கான காலவெளி

- எஸ் . பி. பாலமுருகன்-பதுளை. -

உயிர்ப்பதற்கான
ஓர் நினைவின் உந்தலில்
அடுத்தடுத்த படிகளில்
பயணிக்கிறேன்
மீண்டுமொரு நம்பிக்கை
மீண்டெழுகிறது.......

நிஷப்தம் உலாவிய
காலமெல்லாம்
நிலவுகள் கற்றுத்தந்த பாடம்
நினைவுகளை மீட்க
மட்டுமல்ல.....
நிதானங்களையும் புரியச்
செய்கிறது !!!

தேடல், வாசிப்பு எல்லாமே,
நடந்த, தெரியாத,
விடயங்களினூடு
புரிதலுக்கான எல்லாமே
உள்ளுக்குள்
ஆழமான பதிவுகள்
பதிகின்றன......


காற்று வந்து
காணாமல் போனது போல
நடந்து முடிந்த
காலத்தின்
உடைப்புகள் எல்லாம்
தகர்கின்றன
தகர்த்தி விட்டன.......

மனிதங்கள் எல்லாமே
புதிய வடிவம் தேட
வேண்டியுள்ளது !!!

சுடும் வெயில்
கடும் குளிர்
அடை மழை
காலநிலையுள் வந்து
போகின்றன
ஆனாலும்
நம் இருப்பைக் காக்க
வேண்டிய
அவசியம் தேவைதான்

நம்பிக்கை இன்னுமாகத்
துளிர்கிறது !
கொஞ்சம் வளர
விடுவோம்.....

உயிர்ப்பதற்கான
காலம் வரும்
உச்சி வெயிலில்
உறை பனி
உறக்கம் மறந்த கண்கள்
எல்லாமாக
காத்திருக்கின்றன !!!



குடும்ப மருத்துவத் தொடர் 07

# மனித வாழ்வு கருவறை முதல்..........

- Dr.K.அருளானந்தம் (MBBS, D,F,M) விரிவுரையாளர்
சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

**இ**க் குழந்தைகள் தமது சமூகப் பாடத்தை வீட்டிலிருந்தே கற்கத் தொடங்குகிறது. அதாவது தனது வீடும் - அதனைச் சூழ்ந்த சுற்றாடலும் தனக்குரிய பொருத்தமான- பொருத்தமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்குகிறது.

இப் பருவ காலத்தில் சில பெற்றோர் கற்பித்தலை ஆரம்பிப்பதுடன்- குழந்தையின் இயல்பு நிலையைக் குழப்புகிறார்கள். அத்தோடு குழந்தைகள் தானாக அறிந்து கொள்ள வேண்டியவற்றைத் திணிக்க முற்படுகிறார்கள். இதற்கு இன்றைய சமூக ஓட்டமும், சமூகத்தில் எழக்கூடிய போட்டா போட்டிகளும், எதிர்காலம் பற்றிய அளவுக்கதிகமான எண்ணங்களும் காரணங்களாக அமைகின்றன. தொழில் பார்க்கும் பெற்றோர் இக்கால கட்டத்தில் **"Day care centre"** ரிலும், சில பேர் **"Pre- school"** களிலும் தமது குழந்தைகளைப் பாரப்படுத்துகிறார்கள். இதனால் அவர்களுக்கு ஓரளவு நிம்மதியும் - திருப்தியும் ஏற்படலாம். இக் குழந்தைகள் இந்நிலையங்களில் சரியாக பொறுப்புடன் மேற்பார்வை செய்யப்பட்டால் ஒழிய- குழந்தைகளின் சுயமான தேடல்கள் கட்டுப்படுத்தப்படலாம்.

இக்கால கட்டத்தில் குழந்தைகளின் மூளை வளர்ச்சி துரிதமாக வளர்ச்சியடைவதால் சகல பெற்றோரும் குழந்தைகளின் சிந்திக்கும் திறனை வளர்க்கக் கூடிய வகையில் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். தவிர- வெறுமனே நேரத்தைக் கழிப்பதற்கான அல்லது சிறார்களின் எதிர்காலத்தைச் சிதைப்பதற்கான சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்தக் கூடாது. இவற்றோடு தாயின் சிறந்த அரவணைப்பும், அன்பும், உணவூட்டலும், ஆரோக்கியமான உடல்- உளச்சூழலும் அவசியமாகிறது.

தான் வாழும் சூழல் மிகவும் பொருத்தமானதான கல்விக் கூடமாக அமைகிறது. குழந்தைகளின் தனிச் சுகாதாரம் ( பல், நகம், பாதம்) என்பவற்றில்

அதீத கவனம் எடுப்பதுடன்- தாம் இயற்கைக் கடன்களைக் கழிக்கச் செல்கையில் தாயை நேரடியாக வேண்டி நிற்பார்கள்.

## வீட்டு விபத்துக்கள்



குழந்தைகள் பொருட்களின் கவர்ச்சியான புறத் தோற்றத்தில் நாட்டம் கொள்ளுமே தவிர, அதன் உட்கட்டமைப்பிலோ — செயற்பாடுகளிலோ அக்கறை செலுத்தாது. பொதுவாக அசையக்கூடிய — கையாடக்கூடிய பொருட்களைத் தன்வயப்படுத்த முனையும். இதனால் மின் உபகரணங்கள், தீங்கு செய்யக்கூடிய கூரிய ஓரங்களைக் கொண்ட பொருட்கள், கண்ணால் கவரக் கூடிய நிறப்பதார்த்தங்கள், இலகுவில் உட்கொள்ளக் கூடிய பதார்த்தங்கள் போன்றவற்றை குழந்தைக்கு அருகில் வைக்கக் கூடாது. இதன் மூலம் வீட்டு விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

வாகனங்களை வைத்திருப்போர் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும். குழந்தைகள் வாகனத்தின் உள்ளேயோ — வெளியேயோ இருப்பதனால் பாரிய விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. சில வேளைகளில் குழந்தைகள் வாகனத்துக்குக் கீழே விளையாடி — உறங்கக் கூடும். அத்தோடு வாகனத்துக்குள்ளேயே தனது செயற்பாடுகளைச் செய்யலாம். இவை தொடர்பாகப் பெற்றோர் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

புறச் சூழல்களில் மூடப்படாத கிணறுகள், மூடப்படாத குழிகள்,பாதுகாப்பற்ற நீர்த்தடாகங்கள் போன்றவை இருந்தால் குழந்தை அதனை அணுக முற்படும். எனவே இப்பருவத்தில் குழந்தைகளை அவதாமாக- பொறுப்பாக கவனிக்க வேண்டும். இவ் வேளையில் குழந்தைக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள்- தொற்று நோய்களும், வீட்டு விபத்துக்களுமாகும்.


இதனைவிட இன்றைய நவீன யுகத்தில் குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதையும் நாம் அன்றாடம் பத்திரிகை மற்றும் வானொலி ,தொலைக்காட்சிச் செய்திகள் வாயிலாக அறியக் கூடியதாகவுள்ளது. எனவே இவை தொடர்பிலும் பெற்றோர் அதீத அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

(தொடரும்...)

# விளையாட்டு வலம்

- கவிகரன் -

## பெரியகல்லாறு மத்திய கல்லூரி அணி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது !!!



வருடா வருடம் நடைபெறும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கும் - பெரியகல்லாறு மத்திய கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் கடின பந்து கிரிக்கெட் **"Big match"** இவ்வாண்டு பெரியகல்லாறு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணி 45 ஓவர்களில் 221 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெரியகல்லாறு மத்திய கல்லூரி அணி 42.5 ஓவர்களில் 223 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இப்போட்டியில் மத்திய கல்லூரி அணி சார்பாக 60 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்ற தனுராஜ் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், 60 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்ற நிரோன் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்க ளப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா பரிசில்களை வழங்கி வைத்தார்.

# தரம் -05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகத்

## "தென்றல்" தொகுத்து வழங்கும் மாதிரி வினாத்தாள் -01 (2013)

ஆசிரியர்:- யோ.இ. ஞானரெட்ணம்

பெயர்:-................................ நேரம் - 1 மணி 15 நிமிடம்

பகுதி -II

---

Oபின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

இயற்கை அன்னை கொடைகளில் - ஒன்றான
நீரை நாமே குடிக்கின்றோம்.
நீரை அள்ளிக் குளிக்கின்றோம்.
கூரையாலே விழும் மழை – நீர்
குதூகலமாகவே நாம் பார்ப்போம்.

நல்ல காற்றைச் சுவாசிப்போம்
நறுமலர் மணம் தரும் நற்காற்றே
வல்ல காற்றுப் புயல் வீச
வலிய மரங்கள் வீழ்ந்திடுமே.

1. இப் பாடலில் இயற்கை அன்னையின் கொடைகளாகக் கூறப்பட்டிருப்பவை எவை?

1.......................................... 2..........................................

2. **"வலிய மரங்கள் வீழ்ந்திடுமே"** எனும் வாக்கியத்தை உமது உரைநடையில் எழுதுக.

..........................................................................................

3. பாடலில் குதூகலமாக நாம் எதைப் பார்ப்போம் எனக் கூறப்படுகின்றது?

..........................................................................................

4. பாடலில் இருந்து ஒத்த கருத்துச் சொற்களைத் தெரிந்து எழுதுக.

1. புனல் :- ............................ 2. தென்றல் :- ............................
3. பருகுதல் :- ............................ 4. வாசனை :- ............................

5. பாடலில் இருந்து அஃறிணைப் பன்மைச் சொல்லைத் தெரிந்து எழுதுக.

..........................................................................................

6. பாடலில் நாம் நீரால் அடையும் பயன்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவற்றினைத் தெரிந்து எழுதுக.

.................................................................................................

○ இலக்கம் 7 -10 வரை தரப்பட்டுள்ள பாடல் வரிகள் நாட்டார் பாடலா? அல்லது தொழில் பாடலா? அல்லது தாலாட்டுப் பாடலா? என எழுதுக.

7. நெல்லுப் பொதியோடும் வந்தீரோ – தம்பி
நெல்லு மலைநாடும் கண்டிரோ –தம்பி (..............................)

8. காடுகள் பற்றைகள் வெட்டினோம் - பெரும்
கட்டைகள் தீக்கிரை ஆக்கினோம். (..............................)

9. ஆண்பனையின் நுங்கே அணில் கோதா – மாம்பழமே
கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய் ! (................)

10. பவள மேனியனா வயலில் நாற்றை – பாடி
நட வாரும் தோழர்களே ! (..............................)

○ இலக்கம் 11 -14 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கான பொருத்தமான விடையினை எழுதுக.


11 . 2l 375ml + 4l 520 ml = —l — ml

12. 8l 650 ml - —l—ml = 3l 420 ml


13. — l — ml + 2l 125 ml = 9l 300ml

14. — l — ml - 5l 900ml = 1l 750ml

தரப்பட்டுள்ள அடிமட்டத்தினை அவதானித்து வினாவிற்கான விடையினைக் ○ காண்க.

15. 



○ 1.5 இலிருந்து 1.3 முன்னோக்கிக் காட்டும் இடத்தினைக் குறித்துக் காட்டுக.





16. அடிமட்டத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள இடத்தின் அளவினை எழுதுக.

.................................................................................................


○ இலக்கம் 17 -20 வரை தரப்பட்டுள்ள படங்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.



17. ............ 18. .......... 19. ............ 20. ............

21. தரப்பட்டுள்ள மின்கலத்தின் நேர்முனை (+), மறை முனை(-) யை குறித்துக் காட்டுவதோடு மின்குமிழ் எரிய வைக்க வேண்டுமாயின், அதன் இணைப்பையும் தொடர்பு படுத்திக் காட்டுக.




○ இலக்கம் 22- 26 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிந்து தொடர்புபடுத்துக.

| "அ" பகுதி | "ஆ" பகுதி |
|---|---|
| 22. பிராணிகளுக்குத் தடுப்பூசி போடும் அதிகாரி | சமூர்த்தி அலுவலகம் |
| 23. வருமானச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் அலுவலகம் | அஞ்சல் அலுவலகம் |
| 24. வாக்காளர் இடாப்பின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளும் இடம் | மிருக வைத்தியர் |
| 25. வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கான உணவு முத்திரை பெற்றுக் கொள்ளும் அலுவலகம் | பிரதேச செயலகம் |
| 26. பதிவுத் தபால்களை அனுப்பும் அலுவலகம் | மாவட்ட செயலகம் |

27. நீர்த்தாங்கி யொன்றில் 3/5 பங்கு நீர் உள்ளது. தாங்கி பூரணமாவதற்கு 1.5l நீர் ஊற்ற வேண்டும்- எனில், தற்போது தாங்கியிலுள்ள நீரின் அளவு யாது?

○ இலக்கம் 28 – 31 வரை தரப்பட்டுள்ள படங்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொல்லைத் தமிழில் எழுதுக.








28. ........... 29. ........... 30. ........... 31. ..................

○ தரப்பட்டுள்ள வடிவங்களின் சுற்றளவைக் காண்க.


32.




33.




○ தரப்பட்டுள்ள வரைபினை அவதானித்து வினாக்களுக்கான சரியான விடையினை எழுதுக. வரைபில் தரம் 1 -5 வரையுள்ள மாணவர்களின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது.




34. எந்தத் தரத்தில் கூடுதலான ஆண்கள் கல்வி பயில்கின்றனர்? ..........

35. எந்தத் தரத்தில் குறைவான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்? ......

36. தரம் 3 இல் கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?..........

37. எந்தத் தரத்தில் ஆண்களைப் போல் இருமடங்கு பெண்கள் கல்வி கற்கின்றனர்? ........................

38. தரம் 1 -5 வரை கல்வி கற்கின்ற மாணவர்களில் ஆண்களா? அல்லது பெண்களா? ................................

39. தரம் -5 இல் கற்ற மாணவர்களில் 2/5 பேர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டையவில்லை எனில், சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..................

o இலக்கம் 40 – 43 வரை தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொல்லை எழுதுக.

40. All the best ..............................................................


41. I am a boy ..............................................................

42. How is mammy ..............................................................

43. It is a book ..............................................................

o தரப்பட்டுள்ள பூச்சிகளின் பெயர்களை எழுதுக.

44.  ........................

 45. ........................

o தரப்பட்டுள்ள இலைகளின் பெயர்களை எழுதுக.

46.  ........................

 47. ........................

48. பேரூந்தொன்று 2 மணித்தியாலம் 45 நிமிடங்கள் பயணம் செய்து-பிற்பகல் 2 .15 இற்கு குறிப்பிட்ட இடத்தை அடைந்தது எனில், அது புறப்பட்ட நேரம் யாது? ..........................................

49. பெட்டியொன்றில் 375g நிறையுடைய 18 தேயிலைப் பக்கற்றுக்கள் உள்ளன. அவற்றின் மொத்த நிறை யாது? .........Kg......g

50. பெட்டியொன்றில் 5 டசின் சவர்க்காரக் கட்டிகள் உள்ளன. சவர்க்காரக் கட்டி யொன்றின் விலை- 6.75 சதம் எனில், பெட்டியிலுள்ள கட்டிகளில் 3/5 பங்கு எண்ணிக்கையான கட்டிகளின் விலை யாது?

.........ரூபாய் ......சதம்.

o தரப்பட்டுள்ள புத்தாண்டு விளையாட்டினை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினை நான்கு சொற்களுக்குக் குறையாது எழுதுக.



51. நடைபெறும் போட்டியின் பெயர்:-

..............................................

52. இப்போட்டியுடன் தொடர்புடைய பழமொழி எது?

..............................................

53. இப் போட்டியின் செயற்பாட்டினை உடைய தொழில் எது?

..............................

விளையாட்டின் மூலம் நாம் அடையும் நன்மைகள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.


54. ..........................................................................................

55. ..........................................................................................

56. ..........................................................................................


## விடைகள்

1.நீர், காற்று 2. வைரமான மரங்கள் வீழ்ந்திடுமே. 3. கூரையால் விழும் மழை நீர் 4. 1. நீர் 2. காற்று 3. குடித்தல் 4. மணம் 5. மரங்கள் 6. குடித்தல், குளித்தல் 07. நாட்டார் பாடல் 08. தொழிற் பாடல் 09. தாலாட்டுப் பாடல் 10. தொழிற் பாடல் 11. 6l 895 ml 12. 5l 230ml 13. 7l 175ml 14. 7l 650ml 15.



16. 3.5cm 17. Chair 18. Peacock 19. World 20. Needle


21.




22. பிராணிகளுக்குத் தடுப்பூசி போடும் அதிகாரி
23. வருமானச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் அலுவலகம்
24. வாக்காளர் இடாப்பின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளும் இடம்.
25. வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கான உணவு முத்திரை பெற்றுக் கொள்ளும் அலுவலகம்
26. பதிவுத் தபால்களை அனுப்பும் அலுவலகம்

- சமூர்த்தி அலுவலகம்
- அஞ்சல் அலுவலகம்
- மிருக வைத்தியர்
- பிரதேச செயலகம்
- மாவட்ட செயலகம்

27. 1500ml 28. திவுள 29. பொத்த 30. லேனா 31. வித்தற 32. 26cm 33. 34cm 34. மூன்றாந் தரம் 35. இரண்டாந் தரம் 36. 50 37. ஐந்தாந் தரம் 38. பெண்கள் 39. 45 பேர் 40. நல்வாழ்த்துக்கள் 41. நான் ஒரு ஆண் 42. அம்மா எப்படிச் சுகம்? 43. இது ஒரு புத்தகம். 44. கரப்பான் 45. தென்னம்வண்டு 46. வல்லாரை 47. பசளி 48. மு.ப 11.30 49. 6kg 750g 50. 243.00 51. கயிறு இழுத்தல் 52. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. 53.கரைவலை இழுத்தல் 54,55,56- ஆகியவற்றுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலை அமைந்த வாக்கியங்கள்.





# புத்தம் புதிய

# கம்பியூட்டர்கள்

# ரூபா. 37,500க்கு.

சகலவிதமான கணனிக்குரிய பாகங்களையும்
மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.

**IT Solution**

(இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)

இல.233, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி - 065-2224857,
071-3434634 ஈ.மெயில்- itsolutionsl@yahoo.com

AD/0003

*Total Solution For Your Information Technology Needs*




வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.